## மனித உரிமை செயற்பாட்டாளர்களைப் பாதுகாக்க

# நாடாளுமன்றத்தில் தனி நபர் மசோதா கொண்டுவருவேன்!

## ஸ்டேன்ஸ் சாமி சிலை திறப்பு விழாவில் – கனிமொழி கருணாநிதி எம்.பி. சூளுரை!

**திருச்சி, ஜூலை 8-**

**மனித உரிமை செயற்பாட்டாளர்களை பாதுகாக்க நாடாளுமன்றத்தில தனி நபர் மசோதாவை கொண்டு வருவேன் என்று கனிமொழி கருணாநிதி எம்.பி. குறிப்பிட்டார்.**

திருச்சி மாவட்டம், விரகாலூரில் 05-07-2025 சனிக்கிழமையன்று ஸ்டேன்ஸ் சாமி மக்கள் கூட்டமைப்பு மற்றும் விரகாலூர் கிராம பொதுமக்கள் இணைந்து ஏற்பாடு செய்யப்பட்ட பழங்குடி மக்களின் தோழனாக விளங்கிய ஸ்டேன்ஸ்சாமி அவர்களின் சிலை திறப்பு விழா மற்றும் சனநாயக எழுச்சி மாநாட்டில் கலந்து கொண்டு சிறப்புரையாற்றி, ஸ்டேன்ஸ்சாமி அவர்களின் திருவுருவச் சிலையை தி.மு.க. துணைப் பொதுச்செயலாளரும், தி.மு.க. நாடாளுமன்றக் குழுத் தலைவருமான கனிமொழி கருணாநிதி எம்.பி. திறந்து வைத்தார்!

இவ்விழாவில் அவர் ஆற்றிய உரை வருமாறு:-

"இப்பகுதி மக்கள் கனத்த இதயத்தோடு அதே நேரம் பெருமையோடு ஸ்டேன்ஸ் சாமி சிலையை திறந்து வைத்திருக்கிறார்கள். போராளி என்றால் உலகில் அத்தனை பேருக்கும் நினைவில் வருவது சேகுவேரா. அவர் தன்னுடைய மண்ணுக்காக மட்டும் போராடவில்லை. தன்னுடைய மண் விடுதலை பெற்ற பிறகு வெவ்வேறு நாடுகளுக்கு சென்று அங்கே அடிமைப்பட்டுக் கிடக்கக் கூடிய மக்கள், உரிமைக்காக போராடக் கூடிய மக்களுக்காக போராடியவர்தான் சேகுவேரா.

அதேபோன்ற ஒரு போராளியை பெற்றெடுத்திருக்கக் கூடிய மண் இந்த மண் என்ற பெருமையோடு இருக்கும் மக்கள் நீங்கள்.

**பெருமை மிகு போராளி ஸ்டேன்ஸ் சாமி!**

நம்முடைய ஸ்டேன்ஸ்சாமி அவர்கள் தமிழகத்தைத் தாண்டி, வேறு எங்கெல்லாம் தங்கள் உரிமைகளை பறிகொடுத்துவிட்டு வாழ்வதற்கே திண்டாடிக் கொண்டிருக்கிறார்களோ, தங்களுடைய மண்ணை-உரிமையை மீட்டெடுக்க வேண்டும் என்றும் போராடுகிறார்களோ அங்கெல்லாம் சென்று அந்த மக்களோடு நின்று போராடியவர்தான் ஸ்டேன்ஸ் சாமி அவர்கள்.

இப்படிப்பட்ட போராளியை பெற்றெடுத்த பெருமை மிகு மண்.

ஜார்க்கண்டிலே தன்னுடைய மண்ணை பாதுகாக்க போராடிய 100க்கும் மேற்பட்ட இளைஞர்கள் ஆண்டுக் கணக்கில் சிறையில் அடைக்கப்பட்டார்கள்.

அந்த இளைஞர்களுக்காக இளம் பெண்களுக்காக நியாயம் கிடைக்க வேண்டும் என்று வழக்குத் தொடுத்தவர்தான் நம்முடைய ஸ்டேன்ஸ் சாமி. அந்த மண்ணின் மக்களுக்காக அவர்களோடு சேர்ந்து குரல் கொடுத்தவர். ஆனால், ஒன்றியத்தில் இருக்கும் பாசிச பா.ஜ.க. அரசு கார்ப்பரேட்டுகளுக்காக ஆட்சி நடத்தக் கூடியவர்கள். மக்களுக்கானவர்கள் அல்ல.

அதனால் கார்ப்பரேட்டுகளுக்கு எதிராக எந்த குரல் எழுப்பப்பட்டாலும் அந்தக் குரலை நசுக்கி எறிய வேண்டும் என்று நினைக்கக் கூடியவர்கள். அதே எண்ணத்தோடு காத்து நின்றார்கள்.

ஸ்டேன்ஸ் சாமி ஒரு வீடியோவில் சொல்கிறார், 'எந்த பிமா கொரேகான் வழக்கில் அவர் இணைக்கப்பட்டாரோ, அங்கே நடந்த சதிக்கு அவர் பின்புலமாக சொல்லப்பட்டாரோ அந்த ஊருக்கு தான் போனதே கிடையாது' என்கிறார்;

ஆனால் இன்று இந்தியாவில் பெருமை மிகு வார்த்தையாக ஆன்ட்டி நேஷனல், அர்பன் நக்சல் என ஆகிவிட்டது. இந்த மேடையில் இருக்கக் கூடிய அனைவரும் ஆன்ட்டி நேஷனல்கள், அர்பன் நக்சல்கள்தான்.

யார் கேள்வி கேட்டாலும், கேட்கும் கேள்விகள் அவர்களுக்கானதல்ல, தேசத்துக்கு எதிரானது, தேசத்தின் பாதுகாப்புக்கு எதிரானது என்ற கட்டமைப்பை அவர்கள் தொடர்ந்து உருவாக்கி வைத்திருக்கிறார்கள். அந்த கட்டமைப்பில் உருவாக்கப்பட்ட ஒன்றுதான் பிமே கொரேகான் வழக்கில் சமூக செயற்பாட்டாளர்களை கைது செய்து சிறையில் அடைத்தது.

**பார்க்கின்சன் நோயால் பாதிப்பு!**

84 வயது ஸ்டேன்ஸ் சாமிக்கு. நாட்டிலேயே மிக மூத்த நக்சலைட் என்றால் அது ஸ்டேன்ஸ் சாமிதான். அந்த பெருமையும் அவருக்குத்தான்.

எப்படிப்பட்ட மனிதர் தெரியுமா? பார்க்கின்சன் நோயால் தனது கை ஆடிக் கொண்டிருக்கிறது. ஒரு டம்ளரைக் கூட பிடித்து தண்ணீர் குடிக்க முடியாது. அப்படிப்பட்ட ஒரு மனிதர் நக்சலைட் என்று சிறையில் அடைக்கப்படுகிறார்.

மகாராஷ்டிராவில் இருக்கும் சிறையில் அவர் அடைக்கப்படுகிறார். அவரால் தண்ணீர் கூட குடிக்க முடியவில்லை. ஹென்றி டிபேன் அவர்கள் அங்கே சிறையில் ஸ்டேன்ஸ் சாமி தண்ணீர் குடிக்க ஒரு ஸ்ட்ரா கொடுக்க முடியுமா என்று எல்லாதரப்பிலும் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டது.

சிறை அதிகாரிகள் தரப்பில், ஸ்ட்ரா கொடுக்க முடியாது என்றார்கள். அதற்கு அவர்கள் சொன்ன காரணம் மேலே இருந்து பார்த்துக் கொண்டிருக்கிறார்கள், அதனால் ஸ்ட்ரா கொடுப்பதற்கு எங்களுக்கு பயமாக இருக்கிறது என்பதுதான்.

ஒரு மனிதன், 84 வயதைத் தாண்டிய ஒரு மனிதன், பார்க்கின்சன் நோயால் பாதிக்கப்பட்டு கைகள் நடுங்கிக் கொண்டு, தண்ணீர் குடிக்க முடியாத அவருக்கு... ஸ்ட்ரா கொடுக்க கூடாது,



தவித்த வாய்க்கு தண்ணீர் கொடுக்கக் கூடாது என்று மேலிடம் கவனித்துக் கொண்டிருக்கிறது என்றால், எப்படிப்பட்ட கொடுமையான நிலையில் நாம் வாழ்ந்துகொண்டிருக்கிறோம் என்பதை புரிந்துகொள்ள வேண்டும்.

இன்றைக்கும் பிமா கொரேகான் வழக்கில் கைது செய்யப்பட்டவர்களில் 8 பேர்தான் வெளியே வந்திருக்கிறார்கள். மீதி இருப்பவர்கள் இன்னும் சிறையில்தான் இருக்கிறார்கள்.

இப்படி யார் எதிர்த்துக் கேள்வி கேட்டாலும், அவர்களுக்கு எதிரான வழக்குகள் போட்டு தேச விரோதிகள் என்று முத்திரை குத்துவது அல்லது அவர்களை கொலை செய்யக் கூடிய முயற்சிக்கும் நிலை நாட்டில் நிலவிக் கொண்டிருக்கிறது என்பதை நாம் புரிந்துகொள்ள வேண்டும்.

இப்படிப்பட்ட நிலையில்தான் மக்களை மத ரீதியாக பிரிக்கும் அரசியல், மக்களை அச்சுறுத்தும் அரசியல், மக்களை எப்படியெல்லாம் பிளவுபடுத்த முடியும் என்பதை நிகழ்த்திக் காட்டிவிடும் சட்டங்களாக இருக்கட்டும், மக்களுக்கு எதிரான திட்டங்களாக இருக்கட்டும்.

**இந்தியிலும் சமஸ்கிருதத்திலும் பெயர் வைக்கப்படும் நிலை!**

அவர்கள் கொண்டுவரும் திட்டங்கள் எவற்றுக்கும் மாநில மொழியில் பெயர் வைக்க மாட்டார்கள். எந்தத் திட்டத்துக்கும் ஆங்கிலத்தில் பெயர் வைக்க மாட்டார்கள்.

நானே ஒரு கமிட்டியின் தலைவராக இருக்கிறேன். அது என்ன திட்டம் என்று கேட்டு புரிந்து மீட்டிங் நடத்துவதற்குள் நமக்கே தலை சுற்றிவிடும். காரணம் அந்த பெயரின் அர்த்தம் நமக்கு தெரியாது.

சட்டத்துக்கெல்லாம் இந்தியிலும் சமஸ்கிருதத்திலும் பெயர் மாற்றினார்கள். நான் வழக்கறிஞர்களிடம் கேட்டேன், அந்த பில்லில் என்ன மாற்றம் கொண்டு வந்திருக்கிறார்கள் என்று கேட்டேன். முதலில் அது என்ன பில் என்று புரியட்டும் என்றார்கள்.

இப்படி மொழி ஆதிக்கத்தால் தொடர்ந்து நம்முடைய உரிமைகளை பறிப்பது, ஒவ்வொரு மசோதாவிலும் மாநில உரிமைகளை பறிக்கக் கூடிய ஒரு ஆட்சிதான் ஒன்றிய பா.ஜ.க. ஆட்சி.

மாநில உரிமைகளை பறிக்கக் கூடிய அதேநேரம் சாமானிய மக்களின் உரிமைகளை, சாமானிய மக்களுக்காக போராடக் கூடியவர்களின் உரிமைகளை பறிக்கும் ஆட்சிதான் அங்கே நடைபெற்றுக் கொண்டிருக்கிறது.

என்னுடைய உணவு என்று முடிவு செய்யக் கூடிய உரிமை எனக்கு கிடையாது... என்னுடைய உடை எது என முடிவு செய்யக் கூடிய உரிமை எனக்குக் கிடையாது. என் மதம் எது என முடிவு செய்யக் கூடிய உரிமை எனக்குக் கிடையாது.

என்னுடைய வாழ்விடம் எது என்று ஒரு கார்ப்பரேட் கம்பெனிதான் முடிவு செய்யக் கூடிய ஒரு நிலையை இந்த நாட்டில் அவர்கள் உருவாக்கி வைத்திருக்கிறார்கள்.

இதை எதிர்த்துதான் நம்முடைய முதலமைச்சர் அவர்கள் தொடர்ந்து போராடிக் கொண்டிருக்கிறார்கள். அந்த போராட்டத்தை நாம் வலுப்படுத்த வேண்டும்.

**இன்னொரு விடுதலைப் போராட்டம்!**

இன்று இங்கே சிலையாக இருக்கக் கூடிய ஸ்டேன்ஸ் சாமியாக இருக்கட்டும்.... நம்முடைய முதலமைச்சர் தொடர்ந்து கையிலெடுக்கக் கூடிய போராட்டங்களாக இருக்கட்டும். இங்கே இருக்கும் சமூக ஆர்வலர்கள், எதிர்க்கட்சித் தலைவர்கள் அத்தனை பேரும் இந்த நாட்டின் இன்னொரு விடுதலைப் போராட்டமாகத்தான், இந்த போராட்டத்தை கையிலே எடுத்திருக்கிறார்கள் என்பதை நாம் புரிந்துகொள்ள வேண்டும்.

தேர்தலுக்கான மாற்றத்தை நான் முன் வைக்கவில்லை, தேர்தலைத் தாண்டி தலைமுறைக்கான விடுதலைப் போராட்டத்தை நாம் முன்னெடுக்க வேண்டும். இதைத்தான் நாம் புரிந்துகொள்ள வேண்டும்.

நம்முடைய பிள்ளைகளுக்கு நாம் விட்டுச் செல்லக் கூடியதும் நம்முடைய வீடோ, நிலமோ இல்லை. அவர்களுக்கான உரிமைகளையும் விடுதலையையும் நாம் விட்டுச் செல்ல வேண்டும்.

விடுதலையை விட , உரிமையை விட, சுயமரியாதையை விட வேறு எதுவும் உயர்ந்தது இல்லை என்பதை நாம் புரிந்துகொள்ள வேண்டும்.

வீட்டை விட்டுட்டுப் போகலாம்... அடிமையாக இருந்தால் எந்த பிள்ளையும் அந்த வீட்டில் நிம்மதியாக வாழ முடியாது. உரிமைகள் இல்லாமல் யாரும் நிம்மதியாக சுயமரியாதையோடு வாழ முடியாது.

**அடிதட்டு மக்களின் குரலை கேட்கும் சட்டங்கள் தேவை!**

நம்முடைய உரிமைகளுக்காக, நம் எதிர்காலத் தலைமுறையினரின் சுயமரியாதைக்காக நாம் பாடுபடவேண்டும். இந்த சமூகத்திலே சமூக நீதியை அடித்தட்டிலே இருக்கும் மக்களின் குரலை கேட்கக் கூடிய சட்டங்களை கொண்டுவர வேண்டும்.

இங்கே சமூக செயற்பாட்டாளர்களை பாதுகாக்கும், மனித உரிமை செயல்பாட்டாளர்களை பாதுகாக்கும் சட்டங்கள் இயற்றப்பட வேண்டும் என்று ஒரு தீர்மானம் முன் வைக்கப்பட்டது. இந்த கோரிக்கைகளை முதலமைச்சர் அவர்களும் பார்த்திருப்பார்.

அதேநேரம் அண்ணன் திருமாவளவன் அவர்களும் இதை ஏற்றுக் கொள்வார்கள் என்று நம்புகிறேன்.

பிரைவேட் மெம்பர் பில் எனப்படும் தனி நபர் மசோதாவாக இதை நாடாளுமன்றத்திலே கொண்டு வருவதற்கு நான் தயாராக இருக்கிறேன் என்ற உறுதியை நான் உங்களுக்குத் தருகிறேன்.

ஏனென்றால் மக்களுக்காக குரல் கொடுக்கக் கூடியவர்கள் பாதுகாக்கப்பட வேண்டும். அது தான் திராவிட இயக்க, திராவிட முன்னேற்றக் கழகத்தின் அடிநாதமாக இருக்கிறது. நமது முதலமைச்சரின் திராவிட மாடல் ஆட்சி எல்லாருக்குமான ஆட்சி, எல்லாருக்குமான உரிமைகள் இருக்கக் கூடிய ஆட்சி, எல்லாருடைய எதிர்காலத்தையும் உருவாக்கும் ஆட்சி என்பதைத்தான் மறுபடியும் மறுபடியும் முதலமைச்சர் சொல்லி வருகிறார். இப்படிப்பட்ட எல்லாருக்குமான திட்டம், சட்டம் கனவு., இதை நிறைவேற்றிக் காட்டுவோம்"

இவ்வாறு கனிமொழி கருணாநிதி எம்.பி. பேசினார்.

உடன், பள்ளிக் கல்வித்துறை அமைச்சரும், மாவட்டச் செயலாளருமான அன்பில் மகேஷ் பொய்யாமொழி, மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி செயலாளர் சண்முகம், இந்திய கம்யூனிஸ்ட் செயலாளர் முத்தரசன், விடுதலைச் சிறுத்தைகள் கட்சித் தலைவரும், நாடாளுமன்ற உறுப்பினருமான தொல்.திருமாவளவன், திருச்சி மத்திய மாவட்ட தி.மு.க. செயலாளர் வைரமணி,

சட்டமன்ற உறுப்பினர்கள் சௌந்திரபாண்டியன், இனிகோ இருதயராஜ், காங்கிரஸ் கமிட்டி பேச்சாளர் வேலுச்சாமி, திராவிட விடுதலைக் கழகத் தலைவர் கொளத்தூர் மணி மற்றும் பலர் கலந்து கொண்டனர்.

---

## அரசின் சாதனைகளை டிஜிட்டல் முறையில் கொண்டு சேர்க்க

# தகவல் தொழில்நுட்ப நிர்வாகிகள் 890 பேருக்கு கணினி 'டேப்'!

## கிருஷ்ணகிரி கிழக்கு மாவட்டச் செயலாளர் தே.மதியழகன் வழங்கினார்!

கிருஷ்ணகிரி, ஜூலை 8-

கிருஷ்ணகிரி கிழக்கு மாவட்டத்தில் திராவிட மாடல் அரசின் சாதனைகளை டிஜிட்டல் முறையில் மக்களுக்கு கொண்டு போய் சேர்க்கும் விதமாகவும், ஓரணியில் தமிழ்நாடு உறுப்பினர் சேர்க்கை பணிகளை விரைவாக செய்வதற்கு ஏதுவாக வாக்குச்சாவடி மைய தகவல் தொழில்நுட்ப நிர்வாகிகள் 890 பேருக்கு தமிழகத்திலே முதல்முறையாக கணினி டேப்களை கிருஷ்ணகிரி கிழக்கு மாவட்ட திமுக சார்பாக மாவட்ட செயலாளர் தே.மதியழகன் எம்.எல்.ஏ. அவரது சொந்த நிதியிலிருந்து கிழக்கு மாவட்டத்தில் உள்ள 890 வாக்குச்சாவடி மையங்களுக்கும் வாக்குச் சாவடி தகவல் தொழில்நுட்ப நிர்வாகிகளுக்கு உறுப்பினர் சேர்க்கை எளிமைப்படுத்தும் சீரிய நோக்கில் டேப்கள் வழங்கப்பட்டன.

தமிழகத்திலேயே இது போன்ற வாக்குச்சாவடி தகவல் தொழில்நுட்ப நிர்வாகிகளுக்கு கணினி டேப்கள் வழங்கப்பட்டுள்ளது இதுவே முதலாவது என்பது குறிப்பிடத்தக்கது.

இந்த நிகழ்ச்சியில் மாவட்ட அவைத் தலைவர் நாகராஜ், மாநில தகவல் தொழில்நுட்ப துணை செயலாளர் இசை, மாவட்ட துணை செயலாளர் கோவிந்தசாமி, சாவித்திரி கடலரசு மூர்த்தி, பொருளாளர் கதிரவன் தலைமை செயற்குழு உறுப்பினர்கள் செந்தில், கிருபாகரன் பொதுக்குழு உறுப்பினர் நாகராசன், கிருஷ்ணகிரி நகரக் கழக பொறுப்பாளர்கள் அஸ்லாம் வேல்மணி, ஒன்றிய செயலாளர்கள் கோவிந்தன், தனசேகரன், தேங்காய் சுப்பிரமணி, மகேந்திரன், சரவணன், சாந்தமூர்த்தி அறிஞர், ராஜேந்திரன், நரசிம்மன், குணவசந்தரசு, எக்கூர் செல்வம், ரஜினி செல்வம், குமரேசன் பேரூர் கழக செயலாளர்கள் தம்பிதுரை, வெங்கடப்பன், பேரூர் கழக பொறுப்பாளர்கள் பார்த்திபன், சாஜித் தகவல் தொழில் நுட்ப அணி அமைப்பாளர் விஜய் ராஜசேகர், மாவட்ட செய்தி தொடர்பாளர் சீனிவாசன் உள்ளிட்ட நிர்வாகிகள் மற்றும் வாக்கு சாவடி மைய தகவல் தொழில்நுட்ப நிர்வாகிகள் ஏராளமானோர் கலந்து கொண்டனர்.



தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள், சென்னை தலைமைச் செயலகத்தில் வேளாண்மை – உழவர் நலத் துறையின் சார்பில் "ஊட்டச்சத்து வேளாண்மை இயக்கம்" என்ற புதிய திட்டத்தை தொடங்கி வைத்ததை தொடர்ந்து, அரியலூர் மாவட்டம், தா.பழூர் ஊராட்சியில் போக்குவரத்து மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் சா.சி.சிவசங்கர் ஊட்டச்சத்து வேளாண்மை இயக்கத்தினை தொடங்கி வைத்து, பயனாளிகளுக்கு பழச்செடிகள் தொகுப்பினை வழங்கினார்கள். உடன் மாவட்ட ஆட்சித்தலைவர் பொ.இரத்தினசாமி, ஜெயங்கொண்டம் சட்டமன்ற உறுப்பினர் க.சொ.க.கண்ணன், அரியலூர் சட்டமன்ற உறுப்பினர் கு.சின்னப்பா மற்றும் பலர் உள்ளனர்.



தமிழ்நாடு முதலமைச்சர், கழகத் தலைவர் அவர்களின் ஆணைக்கிணங்க "ஓரணியில் தமிழ்நாடு" முன்னெடுப்பை வீடு வீடாகக் கொண்டு செல்லும் வகையில் கோவை வடக்கு மாவட்டம், மேட்டுப்பாளையம் தெற்கு நகரம், பூத் எண் 53 ல் கழக துணை பொதுச்செயலாளர், நீலகிரி பாராளுமன்ற உறுப்பினர், ஒன்றிய முன்னாள் அமைச்சர் ஆ.இராசா தலைமையில் மாவட்டச் செயலாளர் தொண்டாமுத்தூர் அ.ரவி முன்னிலையில் கழக உறுப்பினர் சேர்க்கையில் ஈடுபட்டனர். இதில் தலைமை செயற்குழு உறுப்பினர் டி.ஆர்.சண்முகசுந்தரம், மேட்டுப்பாளையம் தெற்கு நகர செயலாளர் முனுசாமி உள்பட முகவர்கள் BLA2, BDA, இளைஞர் அணி, மகளிர் அணி, கழக நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர்.



ஓரணியில் தமிழ்நாட்டை முன்னேற்றிடும், முதல்வர் அவர்களின் தலைமையை ஏற்று நீலகிரி மாவட்டம் கூடலூர் பகுதியில் நீலகிரி மாவட்ட கழகப் பொறுப்பாளர் கே.எம் ராஜு. தமிழ்நாடு அரசு தலைமை கொறடா கா.ராமச்சந்திரன் ஆகியோர் முன்னிலையில் நீலகிரி மாவட்ட அஇஅதிமுக,தமிழக வெற்றிக் கழகம்,நாம் தமிழர் ஆகிய கட்சிகளில் இருந்து இளைஞர்கள் தங்களை தி.மு.கழகத்தில் இணைத்துக் கொண்டனர். இந்நிகழ்வில் மாவட்ட அவை தலைவர் போஜன்,கூடலூர் சட்டமன்ற தொகுதி பார்வையாளர் ஆர்.பி.பரமேஷ் குமார், கூடலூர் நகர செயலாளர் இளஞ்செழியன்பாபு, திட்டக்குழு உறுப்பினர் ராஜேந்திரன் விவசாய அணி துணை அமைப்பாளர் சுரேஷ் நகர இளைஞரணி துணை அமைப்பாளர் பிரேம் ,ராஜா இளைஞரணி தோழர்கள் மணி மூர்த்தி,கே.ஸ்ரீஜேஷ் உட்பட கழக நிர்வாகிகள் உடன் இருந்தனர்.